**சப்பிரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
**வாரப் பாடசாலை**

**பாடம் : செயன்முறைத் தொழில் நுட்பத்திறன்**

**வாரம் : 01**

**தரம் : 6**

**தயாரிப்பு :**

**04. வணிகம்**

**"பண வளர்ச்சிக்கு சரியான வழிகளைத் தேடுவோம்"**

அன்றாட வாழ்க்கையில் நமக்கு அவசியப்படும் பணம் முதல் கொண்டு சகல வளங்களையும் (உணவு, உடை, நடை, மின்சாரம், தொலைபேசி) ஆகியன சிக்கனமாகவும் சிறந்த கட்டுப்பாட்டுப்பாட்டுடனும் உபயோகிப்பதன் மூலம் சேமிப்பு ஏற்படும். சகல சேமிக்புகளும் இறுதியில் பண சேமிப்புக்கு வழியமைக்கும். அவ்வாறு சேமித்த பணத்தை வீடுகளில் வைத்துக் கொள்ளாமல் வேறு உழைப்பு வழிகளில் ஈடுபடுத்துவதன் மூலம் மேலதிக வருமானங்களை உழகைகலாம்.

வங்கி மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களில் பணத்தை சேமிப்பதால் நபர் ஒருவருக்கு மேலதிக வருமானம் ஒன்றை ஈட்டிக் கொள்ள முடியும். அதன் மூலம் வட்டி வருமானம் ஒன்றை உழைப்பதோடு தேவைப்படும் போது சேமிப்புப் பணத்தை மீளப் பெறக் கூடிய ஒரு இலகுவான வழியாகவும் அதனை அறிமுகப்படுத்தலாம்.

1) பணத்தை வைப்பிலிடுவதனூடாக மேலதிக வருமானம் ஒன்றாக வட்டி வருமானம் ஒன்றை பெற்றுக் கொள்ளக் கூடிய நிதி நிறுவனங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.

2) (i) நீர் மற்றும் உமது குடும்ப உறுப்பினர் சேமிப்புப் பணத்தை வைப்பிலிடும் நிதி நிறுவனங்கள் எவை?
   (ii) அந்நிறுவனங்கள் மூலம் உமக்கும் உமது குடும்பத்தினருக்கும் பெற்றுத் தரும் சேவைகள் யாவை?